# கல்லக்குடி கொண்ட கம்பீரத் தலைவர் கலைஞர் 70

நமது இனமானத்தலைவர், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்கள் தனது வாழ்க்கையே போராட்டமாக, போராட்டமே வாழ்க்கையாக ஏற்றுக் கொண்டவர் என்பதை நாம் அறிவோம்.

தமிழ் மொழி காக்க, இனம் காக்க, உலகமெங்கும் தமிழர் கொடி பட்டொளி வீசிப்பறந்திட, அவர் கண்ட களங்கள், எதிர்கொண்ட போராட்டங்கள், ஏற்றுக்கொண்ட சிறைவாசம் எத்தனை! எத்தனை!!

“கல்லக்குடி போராட்டம் எனது பொதுவாழ்வில் மறக்க முடியாத சம்பவம்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவூட்டப்பட்ட, கல்லக்குடி போராட்டம் நடைபெற்று இன்றோடு 70 ஆண்டுகள் ஆகிறது. ஆம். 1953 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி சிதம்பரத்தில் நடைபெற்ற திமுக கழக மாநாட்டில்,



“ஜூலை 15 ஆம் நாள் கல்லக்குடி களத்திலே கருணாநிதி நிற்கும் போது, அந்தப் போராட்டத்தின் அறிகுறியாகவும், தென்னாட்டுத் தலைவர்களை “ நான்சென்ஸ் என்று இகழ்ந்து பேசிய நேருவைக் கண்டிப்பதற்கு அறிகுறியாகவும் தமிழகமெங்கும் உள்ள தமிழர்கள் புகைவண்டிகளை நிறுத்தப்போகிறார்கள் “ என பேரறிஞர் அண்ணா அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட போராட்டத்திற்கு தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று இன்றோடு எழுபது ஆண்டுகள் நிறைவடைகிறது.

கல்லக்குடி அல்லது பழுங்காநத்தம் எனப் பெயர் கொண்ட தமிழ் மூதூர் “ டால்மியாபுரம் “ என அழைப்பதைக் கண்டு அதிர்ந்தெழுந்து, முத்தமிழ் படைகெட, முன்னேற்றம் தடைபட இனிவிடோம் என முரசறைந்து முத்தமிழறிஞர் முடுக்கிய போராட்டம் முடிந்து 70 ஆண்டுகளாகிறது.

ஆறு உயிர்களைப் பலிகொண்டு, அநேகரை சித்திரவதை செய்து, 5000 பேரை சிறைக்கனுப்பிய கல்லக்குடி போராட்டம் இதே ஜூலை 15 ஆம் தேதியில் தான் நடைபெற்றது.

போராட்டத்தில் கலந்து கொள்ள, போலீசாரிடம் சிக்கி விடாமல் தவிர்க்க ஜூலை 14 ஆம் தேதி திருவாரூர் சென்ற தலைவர் கலைஞர், அன்று இரவு லால்குடியில் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். இதற்கிடையே அறிஞர் அண்ணா, நாவலர், சம்பத், மதியழகன், என்.வி.நடராசன் ஆகியோர் கைதான தகவல் கிடைக்கிறது. கூட்டம் இரவு 2 மணிக்கு முடிவடை கிறது. பின்னர் கழகத்தோழர்களுடன் போராட்டம் குறித்து கலந்தாலோசித்தபடியே பொழுதும் விடிகிறது.

ஜூலை 15-ல் டால்மியாபுரமெனும் பெயரை மாற்றி, கல்லக்குடி என அறிவிக்கக்கோரி புகைவண்டியை நிறுத்தப் புறப்படுகிறது கலைஞரின் படை.

முதல் படையில் 25 பேர். இதை ஐந்து பகுதியாக பிரித்துக்கொள்கிறார் தலைவர்.

முதல் பகுதியில்

1.*தலைவர் கலைஞர்*

2.முல்லை சக்தி.

3.கஸ்தூரி ராஜா.

4.குமாரவேல்.

5 குழந்தைவேல் ஆகியோர் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுக்கின்றனர்.

கட்டுக்கடங்காத மக்கள் வெள்ளம் ஒருபக்கம். மறுபக்கம் துப்பாக்கி ஏந்திய ரிசர்வ் போலீசார், கலெக்டர், டி. எஸ். பி, சர்கிள், சப் இன்ஸ்பெக்டர்கள், மாஜிஸ்ட்ரேட், சார்ஜென்ட் ஆகியோர். அதிகாரிகள் அருகில் வருகின்றனர்.

“ஏன் இப்படி பொதுமக்களுக்கு இடையூறு செய்கின்றீர்கள். டால்மியாபுரம் வேண்டாமென்றால், மேலிடத்திற்கு எழுதுங்கள்” என்கிறார்கள்.

“எல்லா முயற்சிகளும் முடிந்து விட்டன. தீட்டிய கடிதங்கள் எவ்வளவு! தீர்மானங்கள் எத்தனை! தில்லியின் திருநோக்கு படவில்லை எம்மீது! ஆகவே அவர்கள் கவனத்தை கவரவே இம்முறையை கையாள்கிறோம்” என சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொள்கின்றனர். கடகடவென கிளம்பிய புகைவண்டி நகர்கிறது. “தமிழ் வாழ்க! “ என தலைவர் இருதயம் உச்சரிக்கிறது.

ஒரு சப்தம் மீண்டும் கிரீன்.....என்று, கண்களைத் திறந்து பார்க்கின்றனர்.

உயிரோடுதான் இருக்கிறார்கள். சிறிது தூரத்தில் புகைவண்டி தலைவர் கலைஞரின் உடலை ஒட்டினாற்போல் நின்று கொண்டிருக்கிறது.

அனைவரும் கைது செய்யப்படுவதாக அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டு, அரியலூர் கிளைச்சிறையில் அடைக்கப்படுகின்றனர்.



**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்

அங்கே மண்சட்டி சோறு. அதுவும் மஞ்சள் வண்ணச் சோறு. பஞ்சவண்ணக் குழம்பு, உப்பிலும் புளியிலும், காரத்திலும் சேராமல் ஒதுங்கியே நிற்கும் பரங்கிக்காய். இவை தான் அரியலூர் சிறையில் நமது தலைவருக்கு அளிக்கப்பட்ட அறுசுவை உணவு.

**கோடி, கோடியாய் மக்கள் பணத்தை கொள்ளையடித்து, ஊழல் வழக்கில் சிறை சென்ற ஜெயலலிதாவுக்கு கலைஞராட்சியில் மின்விசிறி, கட்டில், டேபிள், டவல், கணக்கிட முடியாத கர்சிப், மினரல் வாட்டர், கொசுவர்த்தி சுருள் போன்ற வசதிகள்.**

**ஆனால் கொண்ட கொள்கைக்காக கோமகன் அண்ணாவின் ஆணையேற்ற கலைஞருக்கு 70 ஆண்டின் முன்னே நேர்ந்திட்ட சிறைக்கொட்டடி கொடுமை பாரீர். அவரே சொல்கிறார்;**

**“வாழ்க்கையில் அதுவரை தொட்டறியாத கஷ்டத்தை அந்த இரவு வேளையில் அரியலூர் கிளைச்சிறையில் அனுபவித்தோம். படாதபாடு பட்டு இரவை நகர்த்தினோம். கலங்கிய கண்களுடன் இராம. சுப்பையா என்னைப் பார்த்து “என் மடியில் சாய்ந்து கொள்ளுங்கள்” என்றார். முயன்றேன். முடிய வில்லை. பிறகு ஒரு வழி கண்டுபிடித்தேன். காற்றும் லேசாக வரும். உடம்பையும் உருட்டாமல் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் சிறைக்கம்பிகளைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் தூங்கினேன்.”**

இந்தக் கொடுமையிலும் தலைவரின் நகைச்சுவையுணர்வை பாருங்கள்.

அன்று இரவு பூச்சிகள் வந்தன, கொசுக்கள் வந்தன. வராதவைகளில் முக்கியமான ஒன்று காற்று “ என தனது நெஞ்சுக்கு நீதியில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜூலை 17 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் அரியலூர் நீதிமன்றத்தில் போராட்டத் தலைவர் என்ற முறையில் தலைவர் கலைஞருக்கும், மற்றும் நால்வருக்கும் ஆறு மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடாத காலத்தில், பின்னாளில் முதல்வராக, அமைச்சராக, ஏன் சட்டமன்ற உறுப்பினராகத் கூட வருவோமென தலைவர் கலைஞர் அவர்கள் நினைத்துப் பார்த்திராத நாளில் அன்னை தமிழ் காக்க, அப்போதே பலதிரைப்படங்களுக்கு கதை வசனமெழுதி, பெரும் தயாரிப்பாளரெல்லாம் அவரை மொய்த்திருந்து சொந்தக் காரில் பயணம் செய்த நிலையில் கடுங்காவல் தண்டனை ஏற்ற கலைஞரின் தியாக உணர்வு இன்றைய இளைஞர்களுக்கு பிரமிப்பன்றோ!

இந்த சிறைக்கொடுமை நாட்களில்தான் தலைவர் கலைஞரைக் காண, இன்று எழுபது வயதாகும் தலைவர் தளபதியவர்கள் ஐந்து மாதக் கைக்குழந்தையாக அன்னையார் தயாளு அம்மையாருடன் அடிக்கடி அழைத்துச் செல்லப்படுவாராம்.

அதனால்தானன்றோ ஐம்பதுகளில் கலைஞரிடம் கொப்பளித்த வீரம், வேகம், விவேகம், அதே வெண்கலக்குரல், கட்டுக்கடங்காத கூட்டத்தையும் கவர்ந்திழுக்கும் மந்திரப்புன்னகை, மயக்கும் தமிழ் சொல்லாட்சி இதோ இன்று நமது தளபதியவர்களிடம்!

### எத்தனை ஒற்றுமை!

**ரஷ்ய புரட்சித்தலைவர் லெனின் இறந்த 1924 ஆம் ஆண்டில் பிறந்தவர் நம் தலைவர் கலைஞர். அதே லெனினின் சீடர் இரும்பு மனிதர் ஸ்டாலின் இறந்த 1953 ஆம் ஆண்டில் பிறந்தவர் நம் தளபதியவர்கள்.**

**1965 ல் மாணவர்களை தூண்டிவிட்டாரென கலைஞர் மீது வழக்கு. தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது. பாளையங்கோட்டையில் தனிமைச்சிறை.**

**2003 ல் இராணிமேரி கல்லூரி மாணவியரை தூண்டிவிட்டாரென நம் தளபதியவர்கள் மீதும் வழக்கு, சிறை. வரலாறு திரும்பிய அதிசயத்தை பாருங்கள்.**

ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள் 1953 நவம்பர் 21 ஆம் நாள் விடுதலையாகிறார். அவரை சிறைவாசலில் தலைமைக்கழகப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் மாலையணிவித்து, கட்டித் தழுவி வரவேற்கின்றனர்.

நவம்பர் 29 ந்தேதி சிறை சென்ற செம்மலுக்கு சென்னையில் வரவேற்பு.

அன்றைய மாவட்டக் கழக செயலாளர் கே. எம். கண்ணபிரான் (முன்னாள் அமைச்சர் கவிஞர் வேழவேந்தன் அவர்களின் மாமனார்) முன்னின்று ஏற்பாடு செய்கிறார். எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயிலில் இருந்து இறங்கமுடியாத அளவிற்கு மக்கள் கூட்டம்.



வாழ்த்து முழக்கங்களுடன் மக்கள் கடலிடையே சூழ்ந்துக்கொள்ளப்பட்ட தலைவர் கலைஞரை புரட்சிநடிகர் எம்.ஜி.ஆரும், மதுரை முத்துவும் படாதபாடு பட்டு விடுவிக்கின்றனர். அந்த நேரத்தில் தான் எம். ஜி. ஆரின் விலையுயர்ந்த கைகடிகாரம் அவர் கண்ணெதிரிலேயே களவாடப்படுகிறது.

கலையுலகத்திலும், கழகத்திலும் தனக்கு பெருமை சேர்த்த கலைஞரைவிட தனது கைகடிகாரம் பெரிதல்ல என நினைத்திருப்பார் எம். ஜி. ஆர்.

வரவேற்பு பேரணி மவுண்ட் ரோட்டை (அண்ணாசாலை) அடைகிறது. எங்கெங்கு காணினும் மக்கள் தலைகள். கருப்பு சிவப்பு இருவண்ணக் கொடிகள்.

மனிதர்கள் நகர்வதே நரகவேதனை. இதில் வாகனங்கள் எங்கே செல்வது? பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டு விட்டது. இந்த நெரிசலில் சிக்கிக்கொண்ட கார்களில் அன்றைய அமெரிக்க துணை ஜனாதிபதியும், பிந்நாளில் அமெரிக்க ஜனாதிபதியுமான நிக்சனின் காரும் ஒன்று.

இப்படி....,

மிகப்பெரிய தியாக வரலாற்றிற்கு சொந்தக்காரரான தலைவர் கலைஞரின் வாழ்க்கையில் மறக்க முடியாத பக்கமன்றோ கல்லக்குடி போராட்டம்!

இதனால்தானே, தண்டவாளத்தில் தலைவைத்து படு என்றாலும், அமைச்சர் பதவி ஏற்றிடு என்றாலும் இரண்டையும் சமமாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி என பேரறிஞர் பெருந்தகை அண்ணா பெருமிதம் கொண்டார். அதோடு தலைவர் கலைஞரின் மனசாட்சி, மாமேதை முரசொலி மாறன் அவர்களின் தயாரிப்பில் வெளிவந்த எங்கள் தங்கம் திரைப்படத்தில், ‘ஓடும் ரயிலை இடைமறித்து, அதன் பாதையில் தனது தலைவைத்து, உயிரை துரும்பாய் தான்மதித்து, தமிழ பெயரைக் காத்த கூட்டமிது “ என்று தலைவரின் தியாக வரலாற்றை திரைப்பாடல் வழியே எம்.ஜி.ஆர் பெருமிதம் கொண்டு படுவதாகவும் ஒரு பாடல் இடம்பெற்றது.

எனவே, இந்த நாள் கழக வரலாற்றில் மிக முக்கியமான நாள்; தியாக வரலாற்றை நினைவு கூரும் நாள்!

தலைவர் கலைஞர் அவர்கள் பெற்ற போராட்ட ரணங்களை, தியாக வடுக்களை நாமெல்லாம் எண்ணிப்பார்த்து போற்றிட வேண்டிய நாள்!

இதே நாளில் 70 ஆண்டுகளுக்கு முன் தலைவர் கலைஞர் கொண்டிருந்த அதே போர்குணம், துணிவு, மொழி காக்க உயிரையும் கொடுக்க சமர்புரிந்த அவரின் தியாக உள்ளம், அஞ்சாநெஞ்சம் இவற்றை நாமும் பெற்றிட வெற்றிச்சூரியனாம் தலைவர் கலைஞரை வணங்கிடுவோம்!

**இன்று, கொற்றக்குடையா? கொள்கையா? எது வேண்டுமெனில் கொள்கையை விற்றுப்பிழைக்க வேறுநபர் பாரென்போம். என்ற தலைவர் கலைஞரின் சுயமரியாதை சுடரேந்தி, சுற்றிவரும் பகை நடுங்க கொள்கை வகுப்பதில் சற்றும் கலைஞரின் தடம் மாற மாட்டோம் என சூளுரைத்து, ஆரியத்தின் வேரறுக்க அனைவருக்கும் தலைமை ஏற்கும் தளபதியவர்களின் கரங்களை மேலும் வலுப்பெற சபதமேற்போம்!**

அதோ, அதோ இசைமுரசு அனிபாவின் கம்பீரக்குரல் ஒலிக்கிறது.

“*கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!*

*மக்கள் உள்ளம் குடிகொண்ட உண்மைத் தலைவர் வாழ்கவே!*

---

முன்னாள் ஒன்றியச் செயலாளர் - நினைவில் வாழும்

## எடையூர் ந.உ.சிவசாமி திருவுருவப் படம்!

### பூண்டி கலைவாணன் திறந்து வைத்தார்! ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை!

திருவாரூர், ஜூலை 16- திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியத்தைச சேர்ந்தவரும் முன்னாள் ஒன்றியச் செயலாளரும், தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினருமான மறைந்த ந.உ.சிவசாமி அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வில் அவரது திருவுருவப் படத்தினை மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்.

தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு ஆகியோர் முன்னிலை ஏற்றனர். ந.உ.சிவசாமி அவர்களின் சொந்த ஊரான எடையூரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத்தினரும் பொது மக்களும் பெருந்திரளாகப் பங்கேற்று மறைந்த ந.உ.சிவசாமி அவர்களுக்குப் புகழஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் மாரிமுத்து எம்.எல்.ஏ., பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ். தியாகபாரி, ஒன்றியச் செயலாளர்கள் இரா.மனோகரன், வீ.எஸ்.ஆர்.தேவ தாஸ், பால. ஞானவேலு, ப.பிரகாஷ், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆடலரசன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் இல.மேகநாதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன், ந.உ.சி.துரையரசன், ந.உ.சி.மாதவன், ராஜமணியம்மாள், ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.ஆர்.எஸ். கணேஷ் குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கல்வித்தந்தை காமராஜரின் 121 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், வெள்ளகோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காமராஜரின் திருவுருவப்படத்திற்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் வெள்ளக்கோயில் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி ஆதரவற்றோர் காப்பகத்தில் உள்ள, முதியவர்கள், சிறுவர்களுக்கு ஒரு நாள் உணவினை வழங்கினார். இதில் மாவட்டக் கழக துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர அவைத்தலைவர் சி.குமரவேல் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! மு.பி.ம.சத்தியசீலன் வரவேற்புரை!

## விராலிமலை ஒன்றியத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜூலை 16 நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் விளாப்பட்டியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

விராலிமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர் காமு.மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் எம். பழனியப்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.பாண்டியன், காந்தி, ஆர்.ராமசாமி, எம். செல்லத்துரை, கா.பூபதி, ஆர். நேரு, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சாந்தி தங்க சிங்கம், எம்.ரவிச்சந்திரன், பரமேஸ்வரி காமராஜ், மை.கலைவாணன், எஸ். சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக கொள்கை பரப்புச் செயலாளர்தமிழ்நாடு பாடநூல்கழகதலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், கே.ஆர்.என். போஸ், எம்.லியாக்கத் அலி, எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், அன்சாரி பாஷீத், ராஜா ஸ்டாலின், மகேந்திரன், பி.எல்.ராமசாமி, சி.நடராஜன், எம்.உடையப்பன், வி.ராஜ்குமார், எஸ்.ரெகுநாதன், பி.கருப்பையா, எம். கருப்பு நிலா, எஸ்.பழனியப்பன், எம்.சங்கிலிமுத்து, எம். மதியழகன், வி.எம்.அய்யப்பன், என்.லெட்சுமணன், என். ஆறுமுகம், வி.எம்.வீரையா மற்றும் எழில் ராஜா, புதுகை ஆதி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி பி.சிவா நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கீழ் புதுப்பட்டு தரை பாலத்தை உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன் உள்ளனர்.